# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 24 வியாழக்கிழமை 06.02.2025 கதிர் 119







### அமைதியற்ற முறையில் நடந்தால்

# சபையை விட்டு வெளியேற்றுவோம்

## அர்ச்சுனா எம்.பியை எச்சரித்த பிரதி சபாநாயகர்





**கொழும்பு, பெப் 06**

**சபையில் அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட யாழ்ப்பாணம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவைப் படைக்கல சேவிதர்களைக் கொண்டு சபையில் இருந்து வெளி யேற்ற நேரிடும் என்று பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலி கடுமையாக எச்சரித்தார்.**

நாடாளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரதமரிடத்தில் கேள்வி எழுப்பி உரையாற்றும்போது, சபா பீடத்தை அவமதிக்கும் வகையில் அவர் வசனமொன்றை வெளியிட்டதால் ஏற்பட்ட சர்ச்சையின்போது அர்ச்சுனா எம்.பி அமைதியற்ற முறையில் நடந்துகொண்டமையால் சபா நாயகர் இவ்வாறு எச்சரிக்கையை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்ட கருத்தொன்று தொடர்பில் பிரதி சபாநாயகர் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்போது, நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் அர்ச்சுனா எம்.பியினால் சபாநாயகரை பார்த்து வெட்கம் என்று கூறிய வசனத்தை சுட்டிக்காட்டியும் தெரிவித்தார்.

“எதிர்க்கட்சித் தலைவர் சபாபீட ஆசனத்தை அவமதிக்கும் வகையில் கருத்து 7 ▶

### தையிட்டி விகாரை தொடர்பில்

# அர்ச்சுனா எம்.பியின் கருத்துக்கு எதிர்ப்பு



தையிட்டி , பெப். 06

யாழ். தையிட்டி விகாரையை இடித்து அகற்றாமல் அந்தக் காணியின் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணி வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்த கருத்துக்கு, வடக்கு மாகாண காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் முரளிதரன் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் 7 ▶

# புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தும் அரசு

## கொக்கரிக்கின்றார் விமல்



கொழும்பு, பெப். 06

கனடா உட்பட வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் தலையீட்டாலேயே வடக்கு மாகாணத்தை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது எனவும், அதனால்தான் டயஸ் போராக்களை திருப்திப்படுத்தும் வகையில் அரசு செயற்பட்டு வருகின்றது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார். 7 ▶

### வித்தியா கொலை வழக்கு:

# மரணதண்டனைக் குற்றவாளிகளின் மனு ஓகஸ்ட் 25 இல் விசாரணைக்கு



புங்குடுதீவை, பெப். 06

யாழ்ப்பாணம், புங்குடுதீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவியின் கொலைச் சம்பவத்துடன் 7 ▶

# பொங்கல் பொங்கிய சஜித்



கொழும்பு, பெப். 06

கல்கிஸை, படோவிட்ட மாரிபுரம் அருள்மிகு முத்தமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற தைப் பொங்கல் விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மாரிபுரம் அருள்மிகு முத்தமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

இயற்கையைத் தெய்வமாக 7 ▶

# சட்டமா அதிபரின் பரிந்துரைக்கு எதிராக ஊடகவியலாளர்கள் போராட்டம்

## லசந்தவின் படுகொலைக்கு நீதி வேண்டும் என்றும் வலியுறுத்து




கொழும்பு, பெப். 06

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்குச் சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க பரிந்துரை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊடகவியலாளர்கள் இணைந்து உயர்நீதிமன்ற வாயிலில் இன்று வியாழக்கிழமை போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இனந்தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், இந்தக் கொலை வழக்குடன் தொடர்புடைய மூன்று நபர்களை விடுதலை செய்வதற்குச் சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க பரிநதுரை செய்திருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் இணைந்து பதாகைகளை ஏந்தியவாறு உயர்நீதிமன்ற வாயிலில் இன்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது லசந்த விக்கிரமதுங்க உள்ளிட்ட பல 7 ▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஜனாதிபதியும் சி.ஐ.டியினரும் முட்டாள்கள்

கொழும்பு, பெப். 06

உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி வெளிநாட்டில் நிரந்தர வதிவிட உரிமை கோரும் மௌலானா, ஆதார மற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துகிறார் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்)தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து பிள்ளையானின் முன்னாள் செயலாளர் ஆசாத் மௌலானா வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து டெய்லிமிரருக்கு பதில் அளிக்கும்போதே பிள்ளையான் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

உயிர் அச்சுறுத்தல் என தெரிவித்து



வெளிநாட்டில் நிரந்தர வதிவிடத்தை பெறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஆசாத் மௌலானா ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் ஆறு வருடங்களிற்கு முன்னர் இடம்பெற்றது. ஏன் அவர் அந்தவேளை அது குறித்த விபரங்களை அம்பலப்படுத்தாமல் நான்கு வருடங்கள் காத்திருந்த பின்னர் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவைக்கும் சனல் 4ற்க்கும் சென்றார்?

தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனிவிரட்ண உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றவேளை சி.ஐ.டியின் தலைவராக பணியாற்றினார்.

ஜனாதிபதியும் சி.ஐ.டியினரும் முட்டாள்கள். அவர்களுக்கு ஆயுதங்களை கைவிட்டவர்களிற்கும், ஐ.எஸ். மற்றும் முஸ்லிம் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை புரிந்துகொள்ள முடியாதா?

நான் ஆயுதப் போராட்டத்தை விரும்பாததால் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து முதலமைச்சரானேன்.

2015 முதல் 2020 வரைசிறையிலிருந்த ஒருவரால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற பேரழிவு தாக்குதலை எவ்வாறு திட்டமிட முடியும்.

ஆசாத் மௌலானவை நாட்டிற்கு மீண்டும் அழைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை சிறந்த விடயம்.

நான் சி.ஐ.டியினருக்கு ஒத்துழைப்பு வழங்கி போலியான கட்டுக்கதைகளை உருவாக்கியமைக்காக ஆசாத்மௌலானவை கைதுசெய்ய உதவுவேன் என தெரிவித்துள்ளார் (ஐ)

## ரமழான் விடுமுறைக்கான சுற்றறிக்கை



கொழும்பு, பெப். 06

நாட்டில் ரமழான் மாதத்திற்கான விசேட விடுமுறை தொடர்பில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள குறித்த சுற்றறிக்கையானது, அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்களுக்கு அனுப்பியுள்ளது.

மார்ச் 01ஆம் திகதி ஆரம்பமாகும் ரமழான், எதிர்வரும் 30ஆம் திகதி முடிவடையவுள்ளதால் இந்த காலத்தில் முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கு தொழுகையிலும் மதவழிபாடுகளிலும் கலந்து கொள்ளக் கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

தொழுகைகளும் மத வழிபாடுகளும் நாளாந்தம் பின்வரும் நேர அட்டவணைப்படி நிகழும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மு.ப. 03.30 முதல் மு.ப. 06.00 வரை

பி.ப 03.15 முதல் பி.ப 04.15 வரை

பி.ப 06.00 முதல் பி.ப 07.00 வரை

பி.ப 07.30 முதல் பி.ப 10.30 வரை

இக்காலத்தின் போது அந்த உத்தியோகத்தர்கள் சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளக்கூடியதாக வேலை நேரங்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் வேண்டும். மேலும், தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் விசேட விடுமுறை அங்கீகரிக்கப்படலாம்.

அத்துடன், ரமழான் பெருநாளில் இறுதித் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னதாக அரச சேவை கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் தகைமையுடைய முஸ்லிம் உத்தயோகத்தர்களுக்கு விழா முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## அப்பாவின் வழியில் செல்கிறார் அனுர



கொழும்பு, பெப். 06

முன்னாள் ஜனாதிபதி கிராமத்துக்கு கிராமம் சென்றதை போன்று தற்போதைய ஜனாதிபதியும் செல்கிறார். அதுவும் நல்லதே இருப்பினும் மக்கள் மத்தியில் செல்லும் போது அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வுடன் செல்ல வேண்டும் எனபொதுஜன பெரமுனவின் எம்.பி. யான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், காலம் கடந்தாவது நெல்லுக்கான உத்தரவாத விலையை அரசாங்கம் 120 ரூபாவாக நிர்ணயித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

ஆனால் உத்தரவாத விலையை நிர்ணயிப்பதற்கு முன்னரே ஒருசில பகுதிகளில் விவசாயிகள் வேறு வழியில்லாத காரணத்தால் நெல்லை பிரதான அரிசி உற்பத்தியாளர்களுக்கு விற்பனை செய்துவிட்டனர் நாட்டில் தற்போதைய பிரதான பேசுபொருளாக வாகன இறக்குமதி யுள்ளது . தேசிய மக்கள் சக்தி கடந்த காலங்களில் 12 இலட்சத்துக்கு மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என்று குறிப்பிட்டது. ஆனால் இன்று அவ்வாறில்லை. ஆகவே தேர்தல் காலத்தில் மனதுக்கு தோன்றுவதை இலகுவில் குறிப்பிடலாம், ஆனால் அவற்றை செயற்படுத்த முடியாது என்பதை இவர்கள் தற்போதாவது விளங்கிக் கொள்வது நல்லது.

தேங்காய் தட்டுப்பாடு தொடர்பில் பிரதமரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அவரும் அதற்கு பதிலளித்தார். ஆனால் குரங்கு தொல்லை, தேங்காய் சம்பல் மற்றும் தேங்காய் பால் பற்றி அவர் குறிப்பிடப்படவில்லை.

குரங்குகள் தேங்காயை அழிப்பதால் தேங்காய்க்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் ஆரம்பத்தில் குறிப் பிட்டது. பின்னர் தேங்காய் சம்பல் மற்றும் தேங்காய் பால் பயன்பாட்டுக்கு தேங்காய் அதிகளவில் பயன்படுத்தப்படுவதால் தான் தேங்காய்க்கான தட்டுப்பாடு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டது. அடிப்படை பிரச்சினைகளுக்கு சாத்தியமற்ற விடயங்களையே அரசாங்கம் கூறி வருகின்றது. (ஐ)

## அரச வேலை குறித்து எச்சரிக்கை



கொழும்பு, பெப். 06

அரசாங்கத்தின் லட்சினையைப் பயன்படுத்தி மோசடியான வேலை விளம்பரங்கள் அதிகரித்து வருவதுடன், தனிப்பட்ட தரவு திருட்டு அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய நாட்களில் இது குறித்து பல முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இதற்கிடையில், இலங்கை மத்திய வங்கி (CBSL) தனது பெயரில் வேலை வாய்ப்புகளை வழங்குவதாக பொய்யாகக் கூறி ஆன்லைனில் பரவும் ஒரு மோசடி விளம்பரம் குறித்து அதிகாரப்பூர்வ எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த விளம்பரம் முற்றிலும் போலியானது என்று CBSL தெளிவுபடுத்தியது மற்றும் பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறு வலியுறுத்தியது.

இதேபோல், சமீபத்திய மோசடிகளில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் லட்சினையை தவறாக பயன்படுத்தும் வேலை விளம்பரங்களும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பேருந்து – லொறி விபத்தில் பெண் காயம்




கொழும்பு, பெப். 06

சொகுசு பேருந்தும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் வியாழக்கிழமை காலை 11 மணியளவில் நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியின் பிளாக்ஃபுல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டனில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்த பேருந்து மீது எதிர் திசையில், நுவரெலியாவில் இருந்து பிளாக்பூல் நோக்கி பயணித்த லொறி பிரதான வீதியின் குறுக்கே கவனக்குறைவாக திருப்பும் போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் பேருந்தும் லொறியும் சேதமடைந்துள்ளதுடன் , விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்(ஐ)

## இன்று முதல் நெல் கொள்முதல்

*கொழும்பு, பெப். 06*

*அரசாங்கத்தின் உத்தரவாத விலையில் பெரும்போகத்துக்கான நெல் இன்று முதல் கொள்முதல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*விவசாயிகளிடமிருந்து, நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக நெல்லை கொள்வனவு செய்வதற்கான விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் கே.டி.லால் காந்த குறிப்பிட்டுள்ளார்.*

*நெல்லுக்கான உத்தரவாத விலை நேற்று அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஐ)*

# நாடாளுமன்றத்தில் மீண்டும் சலசலப்பு



கொழும்பு, பெப். 06

இன்றைய நாடாளுமன்ற அமர்வுகளின் போது எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்திற்குப் புறம்பான மொழியைப் பயன்படுத்தியதாக ஆளும் கட்சி குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து சபையில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, துணை சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ் குறித்து தெரிவித்த கருத்துக்கு சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க எதிர்ப்பு தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

"நீங்கள் துள்ளாமல் இருங்கள்" என்று பிரேமதாச கூறினார்.

இதையடுத்து "எதிர்க்கட்சித் தலைவர் தான் கூறியதைத் திரும்பப்பெற வேண்டும் அல்லது துணை சபாநாயகரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று ரத்நாயக்க கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் இணைந்த பாராளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ச்சுனா, நடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர பயன்படுத்திய "bugger" என்ற வார்த்தை நீக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார். "நேற்று நான் சொன்ன உங்களுக்கு வெட்கக் கேடு என்ற வார்த்தையை நீங்கள் நீக்கிவிட்டீர்கள். ஏன் பகர் என்ற வார்த்தையையும் நீக்கக்கூடாது," என்று எம்.பி. அர்ச்சுனா கூறினார்.

இதற்கு பதிலளித்த துணை சபாநாயகர், எம்பி ஜெயசேகர பயன்படுத்திய வார்த்தை நீக்கப்படும் என்று கூறினார். அதைத் தொடர்ந்து பிரேமதாச துணை சபாநாயகரிடம் தனது வருத்தத்தைத் தெரிவித்தார். "எனக்கு எந்த ஆணவமும் இல்லை. அதனால், நான் என் மன்னிப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று அவர் கூறுனார். (ஐ)

## மஹிந்தவின் மனு விசாரணை திகதி அறிவிப்பு



கொழும்பு, பெப். 06

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புப் படையினரை 60 அதிகாரிகளாகக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. அதன்படி குறித்த மனுவை எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளதாக கூறியுள்ளது.

இந்த மனு வியாழக்கிழமை நீதிபதிகளான பிரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (ஐ)

## லசந்தவின் மனைவிக்கு ஐ.நாவில் புதிய பதவி

கொழும்பு, பெப். 06

படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் மனைவி சோனாலி சமரசிங்க, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகத்தில் அமைச்சர் ஆலோசகராக நியமிக்கப்படுவார் என தெரிய வந்துள்ளது.

விக்கிரமதுங்க கொலை தொடர்பான குற்றச்சாட்டுகளில் இருந்து மூன்று சந்தேக நபர்களை விடுவிக்க சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்ததை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த முடிவால் அரசாங்கம் வெளிப்படையாகவே கோபமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது (ஐ)

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் பலி






கொழும்பு, பெப். 06

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த எரிபொருள் பவுசர் வண்டியொன்று மட்டக்களப்பு - திருகோணமலை வீதி முறக்கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் வைத்து குறுக்கு வீதியிலிருந்து பிரதான வீதிக்கு வந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்து

மற்றுமொருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் புதன்கிழமை (05) 7.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சித்தாண்டி பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய வீரக்கட்டி ரமேஸ் என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பவுசர் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்திவெளி பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## தேங்காய்களை அரச படைகள் தின்றுவிட்டன



கொழும்பு, பெப். 06

வடக்கு,கிழக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தெங்குப் பயிர்செய்கைக் காணிகள் உட்பட, பல காணிகளை அபகரித்து இந்த நாட்டின் தேங்காய் ஏற்றுமதிக்குத் தடையாக இந்த நாட்டின் அரசபடைகளே உள்ளதாக தமிழரசுக்கட்சியின் வன்னிமாவட்ட எம்.பி.யான துரைராசா ரவிகரன் குற்றம் சாட்டினார்.

முல்லைத்தீவு கேப்பாப்புலவில் இராணுவத்தினர் அபகரித்துள்ள மக்களின் பூர்வீகக் காணிகளில் அதிகளவு தெங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பளையும், அக்காணிகளின் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்ட ரவிகரன் எம்.பி. குறித்த காணிகள் இராணுவத்தின் பிடியிலிருந்து உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தேங்காய் ஏற்றுமதிசெய்வதற்கு இடையூறுகள் காணப்படுகின்றன. குறிப்பாக வடக்கு, கிழக்கில் மக்களுக்குச்சொந்தமான காணிகளை படையினர் இன்னமும் விடுவிப்புச் செய்யப்படவில்லை. புதிய ஆட்சியின்பின்னர் வடக்கு ,கிழக்கில் ஒருசில இராணுவமுகாம்கள் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்டபோதிலும் இன்றளவில் பலநூற்றுக கணக்கான ஏக்கர்நிலங்கள், மக்களின் வாழ்வாதார நிலங்கள் படையினரின் வசமே உள்ளன . (ஐ)

## குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை



*கொழும்பு, பெப். 06*

*முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் சிறைத்தண்டனை அனுபவித்தவேளை பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிழக்குமாகாண முதலமைச்சருமான பிள்ளையான் என அறியப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கான திட்டமிடலில் ஈடுபட்டார் என பிள்ளையானின்செயலாளர்களில் ஒருவரான ஆசாத்மௌலானா என்பவர் செனல் 4இற்கு தெரிவித்தார் என அந்த அதிகாரி டெய்லிமிரருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இந்த குற்றச்சாட்டுகள் குறித்து பாதுகாப்பு தரப்பினர் விசாரணைகள் ஆரம்பித்துள்ளனர். மௌலானா ஏற்கனவே இது குறித்த விபரங்களை செனல் 4இற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் தெரிவித்திருந்தார்.*

*இது குறித்து டெய்லி மிரர் மேலும் தெரிவித்துள்ளதாவது,*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகள் தொடரும் அதேவேளை தேசிய புலனாய்வு பிரிவிற்காக பணியாற்றிய முன்னாள் உயரதிகாரிகள் சிலருக்கு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*சிவனேசதுரை சந்திரகாந்தன் குறித்து குற்றச்சாட்டுகளை முன்வைத்த அவரது செயலாளர்களில் ஒருவரான ஆசாத்மௌலானவுடன் தொடர்பில் உள்ளதாக தெரிவித்துள்ள இந்த அதிகாரிகள், முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் சிறைத்தண்டனை அனுபவித்தவேளை பிள்ளையான் சிறையிலிருந்தவாறே உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கான திட்டமிடலில் ஈடுபட்டார் என ஆசாத்மௌலானா ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் பிரிட்டனின் செனல் 4 தொலைக்காட்சிக்கும் தெரிவித்துள்ளார் என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்.*

*ஆசாத்மௌலானா தெரிவித்துள்ள விடயங்கள் சி.ஐ.டி. அதிகாரி ரவி செனிவிரட்ண தெரிவித்துள்ள விடயங்களுடன் ஒத்துப்போவதாக கூறப்படுகின்றது.*

*ஆசாத் மௌலானா முன்வைத்த குற்றச்சாட்டுகளை தொடர்ந்து சி.ஐ.டியினர் பல தடவை பிள்ளையானை விசாரணை செய்துள்ளதாக தெரிவித்துள்ள சி.ஐ.டியினர் இந்த சதி முயற்சியில் தொடர்புபட்டுள்ளவர்களை விசாரணை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.*

*முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராசிங்கம் கொலை தொடர்பில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்தவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்காக ஜஹ்ரான் குழுவினரின் உதவியை பெறுவதற்கு பிள்ளையான் உதவினார் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)*

# கல்வியை ஆர்.எஸ்.எஸ். மயமாக்க மத்திய அரசு முயற்சி – ராகுல் காந்தி



கல்வியை ஆர்.எஸ்.எஸ் மயமாக்க மத்திய அரசு முயன்று வருகிறது என ஆர்ப்பாட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

புதிய யுஜிசி வரைவு விதிகளை திரும்பப் பெறக்கோரி டெல்லியில் தி.மு.க. மாணவரணி சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சமாஜ்வாதி கட்சியின் தேசிய தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி எம்.பி.க்களும் பங்கேற்றனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ராகுல் காந்தி மேலும் கூறுகையில் மாநிலங்கள் இணைந்தது தான் இந்தியா என இந்திய அரசியலமைப்பு சட்டம் கூறுகிறது. மாநிலங்களின் கலாச்சாரத்திற்கும், மொழிகளுக்கும் மதிப்பு அளிக்கப்பட வேண்டும். பல மொழிகள் ஒன்றிணைந்தது தான் இந்தியா எனும் தேசம்.

யுஜிசி மூலமாக மாநிலங்களின் உரிமையை பறிக்க முயற்சி செய்து வருகின்றது. இதுபோன்ற பல போராட்டங்கள் நடக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஏனெனில் அரசியல மைப்பை தகர்க்க முடியாது என்பதை ஆர்.எஸ்.எஸ். புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் நமது மாநிலங்களைத் தகர்க முடியாது.

அவர்கள் நமது கலாச்சாரங்கள், நமது மரபுகள் மற்றும் நமது வரலாறுகளைத் தாக்க முடியாது என்றார்.

# இந்தியர்களுக்கு கை விலங்கு சம்பவத்தில் விளக்கம் அளிக்கிறார் ஜெய்சங்கர்!



மாநிலங்களவையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்தியர்களுக்கு கை விலங்கு போடப்பட்ட சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விளக்கம் அளிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா வில் சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக நேற்று 104 இந்தியர்கள் தாயகம் திருப்பி அனுப்பப்பட்டனர். அப்போது அவர்களின் கை, கால்களில் விலங்கு போடப்பட்டு இருந்தது தொடர்பான காணொளி அமெரிக்க எல்லை பாதுகாப்புப் படை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டது. இதற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இச்சம்பவம் இன்று நாடாளு மன்றத்தின் இருஅவைகளிலும் எதிரொலித்தது. இதனை எதிர்க்கட்சிகள் கண்டித்ததைத் தொடர்ந்து இருஅவைகளும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, இந்தியர்களுக்கு கை விலங்கு என்ற புகாரை மத்திய அரசின் பத்திரிகை தகவல் மையம் மறுத்துள்ளது.

இந்த நிலையில்,இந்தியர்களுக்கு கை விலங்கு போடப்பட்ட சம்பவம் தொடர்பாக பிரதமர் மோடியிடம் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கம் அளித்துள்ளதாக கூறப்படுகிறது.





# கேரளாவில் தந்தையை வெட்டிக் கொன்ற மருத்துவ மாணவர்!

கேரளாவில் தந்தையை வெட்டிக்கொன்ற மருத்துவ மாணவர் பொலிஸில் சரணடைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் சாருவிளாகம் வெள்ளரடை பகுதியை சேர்ந்தவர் ஜோஸ் வயது 70. இவர் சொந்தமாக தொழில் செய்து வருகிறார்.

இவரது மகன் பிரிஜில் வயது 29. சீனாவில் மருத்துவம் படித்து வந்தார். அதற்கான பரீட்சை எழுதிய போதும் அதில் சித்தியடையவில்லை. இதனை தொடர்ந்து அவர் சொந்த ஊருக்கு திரும்பினார்.

இதனையடுத்து நேற்று இரவு இவர்களது வீட்டில் இருந்து ஜோசின் மனைவி சுஷாமா திடீரென பயங்கரமாக அலறினார். இதனை கேட்ட அக்கம் பக்கத்தினர் அங்கு விரைந்து வந்தனர். அப்போது வீட்டின் சமையல் அறையில் ஜோஸ் வெட்டுக்காயங்களுடன் சடலமாக கிடந்துள்ளார்.

சுஷாமா மயங்கிய நிலையில் இருந்தார். அவரை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது பற்றிய தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணை நடத்தினர். இதில் மகன் பிரிஜில் தான் தந்தையை வெட்டிக் கொலை செய்திருப்பது தெரியவந்தது.

இதனைத்தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் பிரிஜில் சரண் அடைந்தார். அதில் அவர் அளித்த வாக்கு மூலத்தில், தன்னை சுதந்திரமாக வாழ தந்தை அனுமதிக்கவில்லை. அதனால் தான் அவரை கொலை செய்தேன் என தெரிவித்து உள்ளார்



# ஈரானின் சபாஹர் துறைமுகத்தில் இந்தியாவின் முதலீடு பாதிக்குமா?

ஈரானின் சபாஹர் துறைமுகத்தில் இந்தியாவின் முதலீடு பாதிக்கும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானில் சபஹார் துறைமுகத்தில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள 2018 ஆம் ஆண்டு டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு அனுமதி அளித்திருந்தது.

இதனையடுத்து, 2018-ம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி முதல் சபஹார் துறைமுகத்தை இந்தியா குத்தகைக்கு எடுத்ததைத்தொடர்ந்து இந்த குத்தகை ஒவ்வொரு ஆண்டும் நீட்டிக்கப்பட்டு வந்தது. இறுதியாக கடந்தாண்டு ஈரானின் சபஹார் துறைமுகத்தை இந்தியா 10 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்தது.

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் வழியாக மத்திய ஆசிய நாடுகளுக்கு சாலை வழியாக சரக்குகளை அனுப்பலாம். ஆனால் பாகிஸ்தான் உடன் இந்தியா மோதல் போக்கை கடைபிடித்து வருவதால் ஈரானின் சபஹார் துறைமுகம் வழியாக மத்திய ஆசிய நாடுகள், ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியா சரக்குகள் அனுப்பி வருகிறது. மேலும் அந்த நாடுகளில் இருந்து இயற்கை எரிவாயு, கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. சபஹார் துறைமுகத்தால் 30 சதவீதம் அளவுக்கு போக்குவரத்து செலவு குறைவதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், மீண்டும் அமெரிக்க அதிபராக பொறுப்பேற்றுள்ள டொனால்டு டிரம்ப், ஈரானுக்கு எதிரான கடுமையான பொருளாதாரத் தடைகள் கொள்கையை மீண்டும் அமுல்படுத்தியுள்ளார்.

டிரம்பின் இந்த உத்தரவு ஈரானில் சபஹார் துறைமுகம் வழியாக இந்தியா மேற்கொண்டு வரும் வர்த்தகத்தை பாதிக்கும் என்று கூறப்படுகிறது. இந்த துறைமுகத்திற்காக இந்தியா அதிக அளவில் முதலீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவில் அதிபர் டிரம்பை விரைவில் சந்திக்க உள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஆதியில் ஆண்கள்தான் வேட்டைக்குப் போய் உணவு கொண்டுவந்தார்கள் என்றும், பெண்கள் வீட்டில் இருந்து பயிரிட்டு விவசாயம் கண்டறிந்தார்கள் என்றும் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வந்ததைச் சற்றே மாற்றிப் போட்டிருக்கிறது கடந்த வருடத்தின் கண்டுபிடிப்பு. 2020ஆம் வருடம் நவம்பர் மாதம் 4ஆம் திகதி தென் அமெரிக் காவில் உள்ள ஆண்டிஸ் மலையில் ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முந்தைய ஒரு சடலம் கண்டறியப்பட்டது. சோதனைக்கு உட்படுத்தியதில் அது ஒரு பெண்ணின் உடல் என்றும், வேட்டை அவளது தொழில் என்றும் அறிய முடிந்தது.**



# பெண் எனும் பேராளுமை!

மனித குலத்தின் வரலாறு பெண்களிடமிருந்தே தொடங்கியது என்பது தான் முற்றிலும் உண்மை. ஆதி மனித இனத்தின் தலைமையாகப் பெண்தான் இருந்து வழிநடத்தினாள். தனக்குரிய ஆணைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் அவளிடமிருந்தது. காலங்கள் மாற மாற ‘விழித்துக்’ கொண்ட ஆண்களால் தான் அவளது தலைமைப் பொறுப்பு தட்டிப் பறிக்கப்பட்டது.

ஆளுமைத்திறன் என்பது ஒரு சிக்கலான பிரச்சனையில் மனம் தடுமாறாது அதைத் தீர்க்க முயற்சிப்பதும், கைமீறிப் போய்விட்ட விஷயங்களைத் தடுமாறாமல் கையாளுவதும் தான். இந்த விஷயத்தில் ஆண்களை விடப் பெண்கள் தான் அதிகம் திறமை

வாய்ந்தவர்கள். இந்த ஆளுமைத்திறன் ஆண்களுக்கு பெரும் சவாலாக இருந்ததில் மெதுவாக பெண்களின் தலைமைப் பொறுப்பைக் கையகப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு நிர்வகிக்கும் திறன் இல்லை, ஆட்சி செய்யும் திறமை இல்லை என்றெல்லாம் தொடர்ந்து அவர்களின் மூளை வழியாக மரபணுக்களில் புகுத்திவிட்டார்கள். பெண்களும் இதை நம்பத் தொடங்கிவிட்டார்கள் என்பதுதான் பெரும் சோகம்.



படிப்புக்கும் ஆளுமைத் திறனுக்கும் சம்பந் தம் இல்லை. அது அவரவர் வளர்ந்த விதத்திலும், எதிர்கொண்ட பிரச்சனைகளிலும் தான் மேம்படுகிறது. இந்த ஆளுமை உணர்வு தான் சாதாரண மனிதர்களிலிருந்து தலைவர்களைத் தனித்துக் காட்டுகிறது.

மற்றவர்களைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல ஆளுமை. தன்னைத்தானே முதலில் கட்டுப்படுத்துபவர்களே மற்றவர்களையும் எளிதாகக் கட்டுப்படுத்துகின்றனர். அந்த வகையில் பெண்கள் தன் ஆசைகளையும் விருப்பங்களையும் ஒடுக்குவதில் வல்லவர்கள். ஆனால், ஆண்கள் எளிதில் சலனப்படும் இயல்புடையவர்கள். ஆண்கள் மாங்குமாங்கென்று வேலை செய்தாலும், பெண்தான் அவற்றை ஒழுங்குபடுத்தி நிர்வகித்தாள்.



ஆதியில் ஆண்கள்தான் வேட்டைக்குப் போய் உணவு கொண்டுவந்தார்கள் என்றும், பெண்கள் வீட்டில் இருந்து பயிரிட்டு விவசாயம் கண்டறிந்தார்கள் என்றும் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வந்ததைச் சற்றே மாற்றிப் போட்டிருக்கிறது கடந்த வருடத்தின் கண்டுபிடிப்பு.

2020ஆம் வருடம் நவம்பர் மாதம் 4ஆம் திகதி தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டிஸ் மலையில் ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முந்தைய ஒரு சடலம் கண்டறியப்பட்டது. சோதனைக்கு உட்படுத்தியதில் அது ஒரு பெண்ணின் உடல் என்றும், வேட்டை அவளது தொழில் என்றும் அறிய முடிந்தது. இதன் மூலம் ஆண்கள் மட்டுமே வெளியே சென்று வேட்டையாடினார்கள். பெண்கள் வீட்டோடு இருந்து உணவு சேகரித்தார்கள் என்ற கருத்து மாறியது. இந்த ஆய்வினை டாவீசில் (USA) உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் செய்திருக்கின்றனர். இது தொடர்பான ஆய்வுக் கட்டுரை, Female Hunters of the Early Americas என்ற தலைப்பில் நவம்பர் 4 திகதியிட்ட ைை ளுஉடைநஉந யுனஎயஉநெள ஆய்விதழில் வெளியாகியிருக்கிறது.

பெண் என்றாலே மெல்லியளாள் என்று பொதுப்பார்வை இருக்கிறது. ஆனால், ஆணைவிட வலுவானவள் என்ற விஷயத்தை யுகங்களாக மறைத்ததில் தான் ஆண்களின் சாமர்த்தியம் வெளிப்படுகிறது. மனதையும் எண்ணங்களையும் வலுவிழக்கச் செய்தாலே போதும். இயல்பாகவே உடலும் வலுவிழக்கும் என்ற உளவியல் ரீதியான தாக்குதலைத்தான் ஆண்கள் தொடுத்திருக்கிறார்கள்.

சங்ககாலப் பெண்கள் படிப்பறிவுடன் திகழ்ந்தார்கள். ஔவையார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார், இளவெயினி, பாரிமகளிர், காக்கைப் பாடினி, நச்செள்ளை இன்னும் எத்தனையோ மகளிர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். இலக்கியங்களில் சிறந்திருந்தனர். பெண்களின் பெருமை ஓங்கியிருந்தது. என்றாலும் பிற்காலத்தில் வந்த ஆண்கள், பெண்களை முடக்க முதலில் கையிலெடுத்தது அவர்களது கல்வி பயிலும் உரிமையைப் பறித்ததுதான்.

பழந்தமிழகத்தில்கூட அரசாட்சியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெண்களின் பங்களிப்பு இருந்திருக்கிறது. சோழ இளவரசி குந்தவை, நூர்ஜஹான், ஜஹானாரா என்று நிறைய உதாரணங்கள் இருக்கின்றனர்.

இன்னும் எத்தனையோ குடும்பங்களில் பெண் தான் முடிவெடுப்பவளாகத் திகழ்கிறாள். அவள் தொலைநோக்குப் பார்வையுடன் தான் சிந்திக்கிறாள். பெண்ணைக் கலந்து எடுக்காத எந்த முடிவும் வெற்றி பெறுவதில்லை. ஆனால், இதை ஏற்றுக்கொள்ள ஆண்களின் கௌரவம் தடுக்கிறது.

(7ஆம் பக்கம் பார்க்க...)

# பெண்கள் விளையாட்டுகளில் பங்கேற்க திருநங்கைகளுக்கு தடை – டிரம்ப் உத்தரவு!



பெண்களுக்கான விளையாட்டுகளில் பங்கேற்க திருநங்கைகளுக்கு டிரம்ப் அதிரடியாக தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக இரண்டாவது முறை பதவியேற்றது முதல் டொனால்டு டிரம்ப் பல்வேறு உத்தரவுகளை தொடர்ச்சியாக பிறப்பித்து வருகிறார். மேலும், இவரது பல்வேறு கருத்துக்கள் மற்றும் நிர்வாக ரீதியிலான முடிவுகள் உலக அளவில் அதிர்வலைகளையும், கடும் கண்டனங்களையும் எதிர்கொண்டு வருகின்றன.

இந்த வரிசையில் அமெரிக்க அதிபர் டிரம்ப் திருநங்கைகளுக்கு எதிரான நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார். அதன்படி அமெரிக்காவில் திருநங்கைகள் பெண்கள் விளையாட்டுகளில் போட்டியிடுவதைத் தடை செய்து உத்தரவிட்டுள்ளார்.

“பெண்களுக்கான விளையாட்டுகளில் இருந்து ஆண்களை விலக்கி வைப்பது” உத்தரவு ஒருவர் பிறக்கும் போது ஒதுக்கப்படும் “பாலினம்” என்பதை மட்டும் கடைபிடிக்க வேண்டும் என்று அமெரிக்க கூட்டாட்சி நிதியுதவி பெறும் நிறுவனங்களுக்கு அதிகாரத்தை வழங்குகிறது.

இது தொடர்பான உத்தரவில் கையெழுத்திட்ட பிறகு டிரம்ப் கூறுகையில் , “இந்த நிர்வாக உத்தரவின் மூலம், பெண்கள் விளையாட்டு மீதான போர் முடிந்துவிட்டது” என்று கூறினார்.

முன்னதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அதிரடியாக அறிவித்து இருந்தார்.



# எதிர்கால பாலஸ்தீனத்தின் ஒரு பகுதி காசா ஐரோப்பிய யூனியன் அதிரடி அறிவிப்பு!

பாலஸ்தீன அரசின் இன்றியமையாத பகுதியாக காசா இருக்க வேண்டும் என்று ஐரோப்பிய யூனியனின் வெளியுறவு கொள்கை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த விவகாரத்தில் பாலஸ்தீனியர்களுக்கு இருநாட்டு தீர்வை வழங்க ஐரோப்பிய யூனியன் உறுதி கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

“அதிபர் டிரம்பின் கருத்துக்களை கவனத்தில் கொண்டிருக்கிறோம். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு நீண்டகால அமைதியை வழங்குவதற்கான ஒரே வழி இருநாட்டு தீர்வு மட்டும் தான் என்பதை உறுதியாக நம்புகின்றோம். காசா எதிர்கால பாலஸ்தீனத்தின் ஒருங்கிணைந்த பகுதி,” என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக போரால் கடுமையாக பாதிகப்பட்ட காசாவை கையகப்படுத்தி, அங்குள்ள பாலஸ்தீனியர்களை வேறு நாடுகளுக்கு அனுப்பும் திட்டத்தை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்து இருந்தார். அதிபர் டிரம்பின் கருத்துக்கு உலகளவில் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

இதைத்தொடர்ந்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் இருந்து விலகுவதாக அடுத்தடுத்து அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

முதலில் அமெரிக்க அதிபர் டிரம்ப் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இருந்து இஸ்ரேல் விலகுவதாக அறிவித்தமை குறிப்பிடததக்கது.



# நூற்றுக்கும் மேற்பட்ட பெண் கைதிகள் பாலியல் வன்கொடுமை – தீ வைத்து எரிக்கப்பட்ட கொடூரம்!

காங்கோவின் கோமா நகரில் உள்ள மன்செனஸ் சிறையில் நூற்றுக்கணக்கான பெண் கைதிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாகக் கூறப்படுகிறது.

ருவாண்டா ஆதரவு கிளர்ச்சிக் குழுக்கள் கடந்த வாரம் காங்கோ நகரத்திற்குள் நுழைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தின் போது மன்செனஸ் சிறையில் கலவரம் ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையை பயன்படுத்தி ஆயிரக்கணக்கான ஆண் கைதிகள் சிறையில் இருந்து தப்பித்ததாக கூறப்படுகிறது.

இதனிடையே, பெண் கைதிகள் நூற்றுக்கணக்கானோர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருப்பதுடன், அவர்களுக்காக ஒதுக்கப்பட்டு இருந்த சிறை பகுதி தீவைத்து கொளுத்தப்பட்டதில் ஏராளமான பெண்கள் உடல் கருகி உயிரிழந்ததாக ஐ.நா.அமைதிப் பேச்சுவார்த்தை குழுவின் துணை தலைவர் விவியன் வான் டி பெர்ரேவின் தெரிவித்துள்ளார்.

ருவாண்டா ஆதரவு பெற்ற எம் 23 கிளர்ச்சியாளர்கள் விதித்த கட்டுப்பாடுகள் காரணமாக, சம்பவம் குறித்து மேலும் விசாரிக்க ஐ.நா. அமைதிப் பேச்சுவார்த்தை குழுவினரால் சிறைக்குள் செல்ல முடியவில்லை.

இந்த சம்பவம் குறித்து முழுமையாக தகவல்கள் வெளியாகவில்லை எனினும் கிழக்கு காங்கோ ஜனநாயகக் குடியரசில் சமீபத்தில் நடந்த எம் 23 தலைமையிலான மோதலில் இந்த அட்டூழியங்கள் மிக மோசமானவை என்று கூறப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, சிறை வளாகப் பகுதியில் சுமார் 2,000 உடல்கள் அடக்கம் செய்யப்படுவதற்காக வைக்கப்பட்டிருப்பதாக விவியன் வான் டி பெர்ரேவின் கூறினார்.

# முன்னாள் பிரதமர் ஷேக் முஜிபுர் ரகுமான் வீடு, மற்றும் நினைவிடத்தை சூறையாடிய மக்கள்!

டாக்காவில் உள்ள முன்னாள் பிரதமர் ஷேக் முஜிபுர் ரகுமான் வீடு, மற்றும் நினைவிடத்தை போராட்டக்காரர்கள் சூறையாடி தீ வைத்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பங்களாதேஷ் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் திகதி நடந்த மாணவர் போராட்டத்தில் பெரிய வன்முறை வெடித்ததன் எதிரொலியாக பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இதையடுத்து பங்களாதேஷில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அங்கு இடைக்கால தலைவராக முகமது யூனுஸ் தற்போது பொறுப்பு வகித்து வருகிறார்.

பங்களாதேஷில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிட ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி அனுமதிக்கப்பட மாட்டாது என இடைக்கால அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது.

இதற்கிடையே, அவாமி லீக்கின் தற்போது கலைக்கப்பட்ட மாணவர் பிரிவான சத்ரா லீக், ஷேக் ஹசீனா ஆன்லைன் வாயிலாக உரை நிகழ்த்த ஏற்பாடு செய்திருந்தது. அதன்படி நேற்று இரவு ஷேக் ஹசீனா உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பங்களாதேஷில் அவாமி லீக்கை தடை செய்யக் கோரி, டாக்காவில் உள்ள ஷேக் முஜிபுர் ரஹ்மானின் நினைவிடம் மற்றும் வீட்டை போராட்டக்காரர்கள் சேதப்படுத்தி தீ வைத்தனர்.

போராட்டக்காரர்கள் பலர் வீட்டின் இரண்டாவது மாடியில் ஏறி, கடப்பாரைகள் மற்றும் மரக்கட்டைகளைப் பயன்படுத்தி ஷேக் முஜிபுர் ரஹ்மானின் உருவப்படத்தை சேதப்படுத்தியமை குறிப்பிடத்தகக்கத்து.



## சட்டமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)







# லசந்தவின் கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

## அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, பெப். 6

ஊடகவியலாளர் லசந்த விக்கிரம துங்கவைக் கொலை செய்தவர்கள் யார் என்பதை அரசு உடனடியாக வெளிக் கொணர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று வியாழக்கிழமை நாடாளுமன் றத்தில் உரையாற்றும்போது வலியுறுத் தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஊடகவியலாளர் லசந்த விக்கி ரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நான் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி பிரதமரிடம் கேள்வி எழுப்பியி ருந்தேன்.

இத்தகைய தருணத்தில், இது தொடர்பாக அண்மைக்காலமாக அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?

லசந்த விக்கிரமதுங்கவின் படு கொலை தொடர்பில் அரசு தலையிட்டு வெளிப்படையான விசாரணையை நடத்தி, லசந்தவின் குடும்பத்தினருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நீதி நியா யத்தை நிலைநாட்டி, கொலையாளிக ளைச் சட்டத்தின் முன் நிறுத்த நட வடிக்கை எடுக்க வேண்டும்.” - என்றார்.






படுகொலைகளுக்கு நீதி வேண்டும் என்றும் போராட்டக்கா ரர்கள் வலியுறுத்தினர்.

## பொங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிபடும் வாழ்வியலை உலக்கு எடுத்தியம்பிய மகத்தான பண்டிகையான தைப்பொங்கல் விழாவில், சகோதர தமிழ் மக்களோடு இணைந்து அதனைக் கொண்டாடக் கிடைத்தமையைப் பெரும் பாக்கியமாக கருதுவதாக எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

## மரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடைய மரணதண்டனைக் குற்றவாளிகள் தாக்கல் செய்த மனு மீ-தான விசாரணைக்கு உயர்நீதி மன்றம் திகதி அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் பெரும் பர பரப்பை ஏற்படுத்திய யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு மரணதண்டனை விதித்து விசேட நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த மரணதண்டனைக்கு எதிரா கக் குற்றவாளிகள் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனு இன்று ப்ரீத்தி பத்மன் சூரசேன,ஜனக் த சில்வா,சம்பத் அபேக்கோன் ஆகிய மூவரடங்கிய நீதியரசர் ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபரின் சார்பில் ஆஜரான அரச தரப்பு சட்டத்தரணி இந்த மேன் முறையீட்டு மனுக்களை விசாரிப்பதற்கு நாளொன்றை ஒதுக்குமாறு கோரிக்கை முன்வைத்தார்.

அதன்படி உரிய மேன்முறையீட்டு மனுக்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்-துக்கொள்வதற்கு மூவரடங்கிய நீதியரசர் ஆயம் உத்தரவிட்டது.

2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புங்குடுதீவில் சிவலோகநாதன் வித்தியா என்ற பாடசாலை மாணவி கடத்தப்பட்டு பின்னர் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் எழுவருக்கு வீசேட நீதிமன்றம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

அவர்கள் எழுவரும் இந்த மரண-தண்டனை சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து இந்தத் தீர்ப்பை வலுவிழக்கச் செய்யுமாறு உத்தரவிடக் கோரி மேன்முறையீடு செய்தனர்

மேலும்தங்களை இந்தக்குற்றச்சாட்டில் இருந்து விலக்கி தாம் நிரபராதிகள் எனத் தீர்ப்பளிக்குமாறும் குறித்த மேன்முறை யீட்டில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் இயல்பாக வாக்குகள் கிடைத்திருக்கும் என நான் நம்பவில்லை. ஏனெனில் அங்குள்ள குடும்பங்களில் 90 சதவீ-தமானவற்றில் எவரேனும் ஒருவர் வெளிநாட்டில் இருப்பார். அவர்கள் அங்கு பலமாக உள்ளனர். எனவே, அங்கிருந்து வரும் தகவலுக்கமைய இங்கு தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கப்படலாம்.

அந்தச் சக்திகளை (புலம்பெயர்) திருப்-திப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதைக் காணமுடிகின்றது. இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன. நல்லாட்சி காலத்திலும் முகாம்கள் அகற்றப்பட்டன. அத்தியாவசியமானவை எனக் கருதி வைக்கப்பட்டிருந்தவற்றில் இருந்துதான் தற்போது அகற்றல் இடம்பெறுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவை வீட்டில் இருந்து வெளியேற்ற முற்படுகின்றமை, உயிர்-த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்ய முற்படுகின்றமை உட்பட பல நடவடிகைகள் இவ்வாறு டயஸ்பே-ாராக்களைத் திருப்திப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வருகின்றன.

அநுரகுமார இன்று சுதந்திரமாக யாழ்ப்பாணம் செல்வதற்குக் கூட, போரை முடிப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய அரசியல் தலைமைத்தவம்-தான் காரணமாகும் என்பதை மறக்கக் கூடாது.” - என்றார்.

## அர்ச்சுனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், தையிட்டி விகாரை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் இராமநா-தன் அர்ச்சுனா மத நல்லிணக்கத்தின் அடிப்படையில் தையிட்டி விகாரையை இடிக்க முடியாது என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன் அந்தக் கருத்தை நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்விலும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் கருத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ள வடக்கு மாகாண காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் முரளிதரன், வடக்கு மாகாணத்தில் நிலவும் காணி பிரச்சினை தொடர்பில் அவர் அறிந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## சபையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளார். அதேபோன்று நேற்று எம்.பி. ஒருவர் இந்த ஆசனத்தைப் பார்த்து ‘ஷேம்’ என்று கூறி அவமதித்-துள்ளார். நான் அவ்வேளையில் இந்த ஆசனத்தில் இருந்திருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன்.” - என்று பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார்.

இவ்வேளையில், அர்ச்சுனா எம். பி. அது தொடர்பில் ஏதோ கருத்து தெரிவிக்க முயன்றதுடன், அமைதியற்ற முறையிலும் நடந்துகொண்டார்.

இதன்போது ஆசனத்தில் அமருமா-றும், சபையின் ஒழுக்கத்தைப் பேணு-மாறும் பிரதி சபாநாயகர் அவரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், தொடர்ந்-தும் அர்ச்சுனா எம்.பி. அமைதியற்ற முறையில் நடந்து கொண்ட நிலையில், நீங்கள் ஆசனத்தில் அமராவிட்டால் படைக்கல சேவிதர்களைக் கொண்டு சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று பிரதி சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தார். இதையடுத்து அர்ச்சுனா எம்.பி. அமைதியாக இருந்தார்.

# பெண் எனும்.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக் கையாளும் பக்குவமும் பெண்ணுக்கு நிறைய உண்டு. தன்னைவிட ‘இளைய’ வயதுப் பெண்ணை ஓர் ஆண் மணமுடிக்க என்னென்னவோ காரணங்கள் சொல்லலாம். ஆனால், வயது அதிகமான ஆணைக் குறைந்த வயதுப் பெண் சுலபமாக கையாள்வார்கள் என்பதுதான் உண்மை.

பெண்ணின் ஆளுமைத்திறனுக்குச் சரியான எடுத்-துக்காட்டாக அவளது ‘மல்ட்டி டாஸ்கிங்’ வேலைகளைச் செய்வதைச் சொல்லலாம். அவள் சமைத்துக் கொண்டே வோஷிங்மெஷினில் துணிகளைப் போட்டு விட்டு, குழந்தை-தக்கு பால் கொடுத்து, வயதானவர்கள் இருந்தால் காபி போட்டுக் கொடுத்துவிட்டு, வரும் தொலைபேசி அழைப்பை-யும் கவனித்துக் கொள்ள முடியும். ஆனால், ஆணால் ஒரு நேரத்தில் ஒரு வேலைதான் செய்ய முடியும். சமையல்கூட நிறைய ஆண்கள் ஒவ்வொன்றாகத் தான் சமைப்பார்கள். ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வகை சமைக்க முடியாமல் திணறுவார்கள். அவ்வளவு ஏன் பெண்ணால் வீட்டுவேலை, அலுவலக வேலை இரண்டையும் சாதாரணமாக சமாளிக்க முடியும். ஆணால் நிச்சயமாக முடியாது.

இயற்கையாகவே ஆண்களின் மூளையைவிடப் பெண்க-ளின் மூளை 8 சதவீதம் சிறியதாக இருந்தாலும் அவர்களின் மூளைக்கு அதிக திறன் உள்ளதாக ஆராய்ச்சியில் கண்ட றியப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆளுமை என்பது மூளை-யின் அளவில் இல்லை, செயலில் தான் இருக்கிறது என்பது புரிகிறது. படித்தவர்களைவிடப் படிப்பறிவு இல்லாத, அனுபவ அறிவு மிகுந்த கிராமப்புற மகளிர் எத்தனையோ இக்கட்டான சூழ்நிலைகளையும் இலகுவாகச் சமாளித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடலோர மீனவக் குடும்பங்களில் ஆண்கள் மீன் பிடித்து வருவதோடு அவர்களது வேலை முடிந்துவிடும். அந்த மீன்களைச் சுத்தப்படுத்தி, வியாபாரம் செய்து, மீதமான மீ-ன்களைக் கருவாடாக்கி, காசு பார்ப்பது எல்லாம் பெண்கள் வேலைதான். சிக்கல்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட-வர்கள் தான் அவற்றைச் சமாளித்துக் கடக்கிறார்கள்.

கணவன் இறந்த பின்னும் வாழ்க்கையை நகர்த்திச் செல்லும் பெண்கள் ஏராளமாக இருக்கின்றனர். ஆனால், மனைவி இறந்தபின் மனதளவில் முடங்கிவிடும் ஆண்கள் மீதி வாழ்வை அச்சத்துடன்தான் எதிர்கொள்கின்றனர். அல்லது இன்னொரு பெண்ணை மணம்புரிந்து தங்கள் இருப்பைக் காப்பாற்றிக் கொள்கின்றனர் என்பது மறுக்கவ-ியலா நிதர்சனம். இத்தகைய ஆளுமை மிக்கப் பெண்களை மட்டம் தட்டி வைத்திருக்கும் ஆண்கள் இனியாவது தங்கள் குடும்பத்தில் இருக்கும் பெண்களின் ஆளுமைத் திறனைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.








இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2025 இல் வெளியிடப்பெற்றது.